# நீதியான சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான மையத்தினால் சுவிற்சலாந்தில் 2007 ஜூன் 17 நடாத்தப்பட்ட கருத்தரங்கில் திரு நடேசன் சத்தியேந்திரா ஆற்றிய உரையின் தமிழாக்கம்.

ஆயுபோவன், வணக்கம்

இணைத்தலைவர்களே, சகபாடிகளே, நண்பர்களே

எந்த முரண்பாட்டின் சர்வதேசப் பருமானத்தைப்பற்றி நாம் இன்று இங்கு பேசுவதற்கு எத்தனிக்கின்றோமோ, அந்த முரண்பாட்டின் உள்ளகப் பருமானத்தை ஓரளவிற்குத் தன்னும் பிரதிபலிப்பதற்காகவே முதலில் சிங்களத்திலும் பின்னர் தமிழிலும் நான் கூறிய ஓரிரு சொற்களாகும்.

அந்தச் சொற்களைச் சிங்களத்திலும் தமிழிலும் கூறியதற்கு இன்னொரு காரணமும் உண்டு. இன்று, சர்வதேச முரண்பாடு ஒன்றின் இரு பக்கத்தைச் சார்ந்த பலரும் வழமையாக ஆங்கிலப் பேராசிரியர்களால் பயிற்றப் பட்டவர்கள் என்றும், அவர்களது அரசியல் பரப்பெல்லை பொதுவாக ஆக்ஸ்போட், கேம்பிறிட்ஜ், இலண்டன் பொருளியல் கல்லூரி போன்ற நிறுவனங்களுடன் நின்றுவிடுகின்றது என்றும்க பேராசிரியர் கல்துங் கூறியதை மனம் கொள்கிறேன். பேராசிரியர் கல்துங் கூறியது சரி. இருப்பினும் எந்தப் பல்கலைக்கழகத்தில் பயின்றாய் என்பது மட்டுமல்ல கேள்வி, எந்த மொழியில் பேசுகின்றாய் என்பதுமாகும்.

மொழி தொடர்பாடலுக்கான ஒரு வெறும் கருவி மட்டுமல்ல. எவ்வகையில் உலகினை நாம் கிரகித்துக்கொள்கின்றோம் என்பதில் மொழிக்கு ஒரு இடம் உண்டு. உலகின் மீது ஒரு மக்கள் செலுத்தும் பார்வைக்கு மொழி வடிவம் கொடுக்கின்றது. இது, சிங்கள, தமிழ் மக்கள் உள்ளிட்ட எல்லா மக்களுக்கும் பொதுவான உண்மை. மொழியின் சக்தி, அது செலுத்தக் கூடிய செல்வாக்கு என்பனவே 1835 ஆம் ஆண்டில் மக்கோலி பிரபுவால் இந்தியாவிற்கான கல்வி அறிக்கையைச் சமர்ப்பித்தபோது, அந்தக்கல்வி ஆங்கில மொழியில் இடம்பெறவேண்டும் எனச் சொல்ல வைத்தது.

‘‘எமக்கும், எம்மால் ஆளப்படும் கோடிக்கணக்கானவர்களுக்கும் இடையே தொடர்பாடும் ஒரு வர்க்கத்தை எம்மால் இயன்றவரை உருவாக்கவேண்டும். இந்த வர்க்கத்தினர் இரத்தத்தால், நிறத்தால் இந்தியராகவும், விருப்புக்களில், மதிப்பீடுகளில், ஒழுக்கங்களில், அறிவாற்றலில் ஆங்கிலேயராகவும் இருக்கவேண்டும்’’[1] என அவர் சொன்னார்.

தமிழ் மொழியைப் பேசுவோரிடையே இருந்தே தமிழீழ மக்களின் போராட்டம் எழுச்சிபெற்றது. அன்னிய மொழி ஒன்றில் இங்கு நாம் பேசிக்கொள்ளும் பலதையும் அவர்களால் விளங்கிக்கொள்ள முடியாமல் இருக்கலாம். அதேபோல் பௌத்த மதத்துடனான சிங்கள மொழியின் வளர்ச்சியை, மகாவம்சத்தை, அவைபோன்றவற்றை சங்கடமான புனைந்துரைகள் எனத் தட்டிக்கழித்துவிட முடியாது. அந்த வளர்ச்சியின் வெளிப்பாடாக சிங்களத் தேசியம். ‘‘சிங்கள இனத்துவ தேசியம்’’ ஒரு புனைந்துரையல்ல. அது பலவேளைகளில் ‘‘சிறிலங்கன் குடிமக்கள் தேசியம்’’[2] என்ற முகமூடிக்குள் மறைந்திருந்து உலாவந்தபோதும் அதற்குள் மறைந்திருக்கும் சிங்கள இனத்துவ தேசியத்தை மறுக்கமுடியாது. ‘‘தேசம்’’ போன்ற சொற்களை தமிழில், ஏன் சிங்களத்திலும்கூட[3] இலகுவாக மொழிபெயர்த்துவிட முடியாது என்பதையும் நாம் சிலவேளைகளில் சுலபமாக மறந்துவிடுகின்றோம். பெரும்பாலும் இவற்றின் அர்த்தங்கள் மொழிபெயர்ப்பின்போது இழக்கப்படலாம்.

இவற்றையெல்லாம் கூறியபோதும் இந்தக்கருத்தரங்கில் நிகழ்த்தவிருக்கும் முக்கிய மூன்று பேருரைகளில் ஒன்றை ஆற்றுமாறு என்னை அழைத்தமையையிட்டு நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இதன் அர்த்தம் இலங்கைத்தீவில் இடம்பெறும் முரண்பாடு சம்பந்தமான கருத்தரங்குகள் போதுமான அளவில் நடைபெறவில்லை என்பதல்ல. அவ்வாறான கருத்தரங்கங்கள் பல நடைபெற்றுள்ளன. இலங்கைத்தீவில் இடம்பெறும் முரண்பாடு உலகிலேயே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மிக முக்கிய ஆய்வுகளில் ஒன்று என ஆய்வாளர் ஒருவர் கூறியதாக நம்புகின்றேன். ஆனால் ஒருவகையில் பார்க்கப்போனால் இது

ஒரு முதல் கருத்தரங்கு. இதற்குமுன்னர் இடம் பெற்ற கருத்தரங்கங்களில் சர்வதேசப் பருமானத்திற்கு ஓரிரு அமர்வுகள் ஒதுக்கப்பட்டன. இலங்கைத்தீவில் இடம்பெறும் முரண்பாடு சம்பந்தமான சர்வதேசப் பருமானத்திற்கு முற்று முழுதான குவிப்பைக் கொடுத்துள்ள முதல் கருத்தரங்கு இதுவே. அந்தவகையில் அத்தீவில் இடம்பெறும் முரண்பாட்டின் தீர்விற்கான பரிகாரத்தினை பரிந்துரைக்கும் முயற்சியில் நேரத்தை செலவிடுவதில் நான் முனையவில்லை. பூனையுடனான முரண்பாட்டைத் தீர்க்க எலி நடத்திய கருத்தரங்கு பற்றிய கதையை ஒரு எச்சரிக்கையாக நான் எடுத்துக்கொள்கின்றேன். ஆகையால் கருத்தரங்கின் கருப்பொருளான "இலங்கைத்தீவில் இடம்பெறும் முரண்பாடு பற்றிய சர்வதேசப் பருமானம்" என்னும் பொருளுக்கு உட்பட்டு அதுபற்றிய கலந்துரையாடலுக்கு என்னாலான சிறு பங்கினைச் செலுத்துகின்றேன்.

பல ஆண்டுகளுக்கு முன்னர், 1955 ஆம் ஆண்டு கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகத்தில், கேம்பிறிட்ஜ் இந்திய கழகத்தில் கிருஸ்ணமேனன் பேருரை ஒன்றை நிகழ்த்தினார். மண்டபம் நிறைந்திருந்த கூட்டம் இது. "இந்தியாவின் அணிசேராக் கொள்கை" என்பதே அவரது பேச்சுக்கான தலைப்பு. இதற்கு முன்னதாகத்தான் கிருஸ்ணமேனன் இந்திய அமைச்சரவையில் குறிப்பிட்ட துறைகள் சாரா அமைச்சராக நியமிக்கப்பட்டு இருந்தார். இருந்தபோதும் இதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர் ஐ.நா. தாபனத்திற்கான இந்திய தூதுக்குழுவிற்கு இவர் தலைமை தாங்கியிருந்தார். கூர்மையான புத்தியையும், அதைவிடக் கூர்மையான நாவையும் கொண்டவர் இவர்.

கிருஸ்ணமேனன் ஒரு மணிநேரம் பேசுவதாகவும், அந்தப் பேச்சின் பின்னர் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதாகவும் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது. நிறைந்திருந்த கூட்டத்தினர்முன் எழுந்த கிருஸ்ணமேனன் நான் பேசவேண்டிய பொருள்பற்றி என்னுடன் கலந்து ஆலோசிக்கப்படவில்லை. 'இந்தியாவின் அணிசேராக் கொள்கை என்ன' என்ற பேச்சின் பொருள்பற்றி என்னால் ஒரு வசனம் மட்டுமே கூறமுடியும். அதாவது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை என்பது அணிசேராக் கொள்கை என்பதாகும். இதனைக் கூட்டத்தினர் ஜீரணித்துக்கொண்டிருக்கையில் "இருந்தபோதும் எனது பேச்சிற்காக ஒதுக்கப்பட்ட மணி நேரத்தை எந்தக் கேள்விகளாயினும் நீங்கள் கேட்கவிரும்பினால் அதற்குப் பதில் அளிப்பதற்காகச் செலவிட நான் விரும்புகின்றேன்" என்றார் கிருஸ்ணமேனன்.

சிறு தயக்கத்தின் பின்னர் கேள்விக்கணைகள் பாயத்தொடங்கின. சீனாவைப் போல் தைவானும் (அல்லது போர்மோசா) பாதுகாப்புச் சபையில் இடம் பெற்றிருந்த ஆண்டு 1955. மாசேதுங்கின் சீனா அமெரிக்காவால் அங்கீகரிக்கப்பட்டு இருக்கவில்லை. அதன் ஐ. நா. விற்கான அங்கத்துவம் மறுக்கப்பட்டு இருந்தது. கிருஸ்ணமேனன் கேம்பிறிட்ஜ் வந்திருந்த சமயத்தில்தான் அமெரிக்காவின் ஆறாவது கடல்படையணி தைவானுக்கு அருகாமையில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தது. ஒருவகைப் பதட்டம் நிலவிய காலமிது.

கூட்டத்தில் இருந்த வாலிபத்தோற்றம் கொண்ட கேள்வியாளர் ஒருவர் ஒருவகைத் தயக்கத்துடன் எழுந்துநின்று "திரு மேனன் ஐயா, தைவானின் நிலைபற்றி உங்களால் என்னத்தைக் கூற முடியும்" எனக் கேட்டார். சட்டென வந்தது மேனனின் பதில். "தைவானின் நிலை என்னவென்றால் அது சீனாவில் இருந்து 150 மைல் தொலைவிலும், அமெரிக்காவில் இருந்து பல ஆயிரம் மைல்கள் தொலைவிலும் அமைந்திருப்பதாகும்" என்றார் மேனன். கூட்டத்தினர் சிரிப்பில் கரைந்தனர். இருந்தபோதும் யதார்த்தம் என்னவென்றால் 50 ஆண்டுகளுக்கும் பின்னர் தைவான் தொடர்ந்தும் இருப்பது (ஐ.நா. வில் அங்கத்தவராக இல்லாதபோதும்) அமெரிக்காவின் கடல் ஆதிக்கத்தின் நீண்ட வீச்சின் சக்தியைக் காட்டுகின்றது என்பதாகும்.

இன்று கிருஸ்ணமேனன் உயிருடன் இருந்திருப்பின் அவரிடம் சிறீலங்காவின் நிலை குறித்து உங்களால் என்னத்தைக் கூறமுடியும் என்று கேட்டிருந்தால் "பரந்து விரிந்து கிடக்கும் இந்துசமுத்திரத்தில் இந்தியாவில் இருந்து 20 மைல் தொலைவிலும், அமெரிக்காவில் இருந்து பல ஆயிரம் மைல்கள் தொலைவிலும், சீனாவில் இருந்து சில ஆயிரம் மைல்கள் தொலைவிலும் உள்ள ஒரு தீவே சிறீலங்கா" என அவர் கூறியிருப்பார் என நான் சிலவேளைகளில் சிலாகிப்பதுண்டு.

அரசுகளின் செயல்பாடுகளிலும், அரசுகள் அற்ற தேசங்களின் செயல்பாடுகளிலும் புவியியல் (அது நிசப்தமான ஒன்றாயினும்) ஒரு முக்கிய பாத்திரத்தை வகிக்கின்றது. ஒரு அரசானது,

பெரும் உள்நாட்டுச் சந்தையைக் கொண்டிருக்கும்போது, அந்த உள்நாட்டுச் சந்தையின் பருமன் ஒரு கேந்திரச் சொத்தாகின்றது. எங்கு ஒரு அரசானது பெரும் உள்நாட்டுச் சந்தையைக் கொண்டிருக்கவில்லையோ அங்கு பெரும்பாலும் எது கேள்வியெனில் அதன் (பூகோள) அமைவிடம், அமைவிடம், அமைவிடம் என்பதே. எவ்வளவிற்கு ஒரு நாடு சிறிதாக உள்ளதோ, ஒப்பீட்டளவில் அவ்வளவிற்கு அதன் அமைவிடம் முக்கியமாகின்றது. சிலவேளைகளில் அமைவிடமே ஒரு கேந்திரமான சொத்தாகின்றது.

இந்து சமுத்திரம் உலகில் மிகப்பெரிய சமுத்திரம் அல்ல. அது மூன்றாவது பெரிய சமுத்திரம். ஆனால் இச் சமுத்திரம் கிட்டத்தட்ட 47 நாடுகளையும் அத்தோடு பல தீவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.[4]



இவற்றை மேலுள்ள வரைபடத்தில் பார்க்கலாம். கோகோ தீவு மயன்மாரில் இருந்து பெரும் தொலைவில் இல்லை. அங்கு சீனா இப்போது ஒரு தளத்தைக் கொண்டுள்ளது.[5] இவற்றினைவிட அந்தமான் தீவுகள்[6] மாலைதீவுகள்[7], மடகாஸ்கர்[8], பாகிஸ்தானில் ஹொாடொர்[9] இந்தியாவில் கௌவார்[10] என்பவற்றைக் காண்கின்றோம். தெற்கே அமெரிக்க வான், கடல் தளங்களைக் கொண்டுள்ள டியாகோ ஹார்சியாவை[11] சென்றடையலாம். இந்தியாவே 1,200 மைல்கள் வரை இந்து சமுத்திரத்துள் தன்னை விரித்துள்ளது.

இந்து சமுத்திரம் இந்தியரின் சமுத்திரம் எனக் கருதும் பல இந்தியரும் உண்டு.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் கேந்திர முக்கியத்துவம் பல ஆண்டுகளுக்கு முன்பே உணரப்பட்டுள்ளது. “எவர் இந்து சமுத்திரத்தை தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றாரோ அவர் ஆசியாவில் ஆதிக்கம் செலுத்துவர். 21 ஆம் நூற்றாண்டில் ஏழு கடல்களுக்குமான திறவுகோல் இச் சமுத்திரமே. உலகின் தலைவிதி இந்தக் கடல் நீரிலேயே தீர்மானிக்கப்படும்”[12] என ஒரு நூற்றாண்டிற்கு முன்பே அமெரிக்க கடல்படை அட்மிறல் அல்ஃபிறட் தாயர் மஹான் என்பார் கூறியுள்ளார். இந்து சமுத்திரத்தில் பிரித்தானியா செலுத்திய ஆதிக்கமே பிரித்தானிய சாம்ராச்சியத்திற்குக் கால்கோள் இட்டது. இந்த ஆதிக்கத்தையே இரண்டாம் உலக யுத்தத்தின்போது கிட்லர் யேர்மனிய நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலம் தளர்வுறச் செய்ய முயன்றான்.[13]

உலகின் எண்ணை உற்பத்தியில் கிட்டத்தட்ட 40 வீதத்தை இந்து சமுத்திரம் கொண்டுள்ளது.[14] இன்று சிறீலங்காவை அடுத்த மன்னார் கடல்களில், தமிழ் நாட்டை அண்மிய காவேரி வடிநிலங்களில், மயன்மார் கடல்களில் புதிய எண்ணை வள ஆய்வுகள் தொடர்கின்றன.[15] இருப்பினும் இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவம் அது கொண்டுள்ள வளங்களில் இருந்துமட்டும் எழவில்லை. இந்து சமுத்திரம் அதி முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கடல்வழி. உலகின் 50 வீதமான கொள்கலத்தாங்கிக் கப்பல்களையும், மூன்றில் ஒரு பங்களவான பேரளவுத்தாங்கி கப்பல்களையும் மூன்றில் இரண்டு பங்கான எண்ணைக் கப்பல்களையும் இச் சமுத்திரம் சுமக்கின்றது. பெற்றோலியப் பொருட்களின் பெரும் தொகையான வாணிபப் போக்குவரத்தை இக்கடல் நீர் சுமக்கின்றது. அத்தோடு அத்திலாந்திக் சமுத்திரத்தைப் போலன்றி இந்து சமுத்திரத்தின் வாணிபப் போக்குவரத்து அதற்கு வெளியே உள்ள நாடுகளுக்கானது.



இந்து சமுத்திரத்தின் கடல்வழிப்பாதைகள் அதனது கேந்திர முக்கியத்துவத்தைத் துல்லியமாகக் காட்டுகின்றது.

1993 ஆம் ஆண்டில் இருந்து நிகர எண்ணை இறக்கமதியாளராகத் திகழும் சீனா, எண்ணை நுகர்ச்சியில் அமெரிக்காவின் பின் உலகில் இரண்டாவது இடத்தினை வகிக்கின்றது. 2004 இல் இந்த அந்தஸ்தை சீனா பெற்றுள்ளது. இதற்கு முன் இரண்டாவது பெரிய எண்ணை நுகர்வோனாக யப்பான் விளங்கியது. 2000 இலிருந்து 2004 வரையான காலப்பகுதியில் உலகின் பதனிடப்படாத எண்ணைத் தேவையில் 40 வீதமான அளவை சீனா பெற்றிருந்தது.[16]

சீனாவின் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சிக்கு எரிபொருள் வளங்கள்மேல் அதற்குள்ள வழிவகைகள் காத்திரமான காரணியாகும். கடல்பாதைகளையும், தனது எண்ணைத் தேவைகளுக்கான முக்கியமான போக்குவரத்து மார்க்கங்களையும் தன் வசப்படுத்திக்கொள்வதில் சீனா முயற்சிகளை முடிக்கிவிட்டிருப்பது ஆச்சரியப்படுவதற்குரியதொன்றல்ல. இதன் பொருட்டு சீனாவால் கைக்கொள்ளப்படும் புவிசார் அரசியல் வீயூகத்தை "முத்துக்களின் கோர்வை" என்று கூறுவர்.[17]

அதுமட்டுமல்ல,

"19 ஆம் நூற்றாண்டில் எழுச்சிபெற்ற யேர்மனியைப்போல், 20 ஆம் நூற்றாண்டில் எழுச்சிபெற்ற அமெரிக்காவைப்போல் சீனா, இந்தியா போன்ற புதிய சக்திகளின் எழுச்சியானது பிராந்திய கேந்திர களத்தினைச் சடுதியாக மாற்றியமைக்கும்" என எதிர்பார்க்கப்படுகின்றது.[18]

அத்தோடு

21 ஆம் நூற்றாண்டின் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த இருதய பூமியாக இந்து சமுத்திரப் பிராந்தியம் மாறியுள்ளது. 20 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவும் வடகிழக்கு ஆசியாவும் கொண்டிருந்த நிலையை இது தகர்த்துள்ளது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இடம்பெறும் இவ் அபிவிருத்திகள் மேற்குலகச் சார்புநிலையை மழுங்கச்செய்து பல்தலைமைத்துவ சக்திகளின் வருகைக்கு வழிவகுத்துள்ளது.[19]

இலங்கைத் தீவின் முரண்பாட்டிற்கு முன்னரே இந்து சமுத்திர பிராந்தியத்தின் கேந்திர முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டப் போதியளவு கூறியாகிவிட்டது. இந்த முக்கியத்துவம் தொடர்ந்தும் இருக்கும். தீவில் தமிழ், சிங்கள முரண்பாடு தீர்க்கப்பட்ட பின்னரும் இந்தக் கேந்திர முக்கியத்துவம் தொடரும்.

இங்கு, இப்பிராந்தியத்தின் வீறார்ந்த நிலை நேர் அணியான சக்திகளைவிட சமவலுவான சக்திகளின் அணுகுமுறையினை வேண்டிநிற்கின்றது.

"இப் பிராந்தியத்தின் வீறார்ந்த நிலை நேர்கூட்டு அணியைவிட சமவலுவான சக்திகளின் அணுகுமுறையை வேண்டிநிற்கின்றது. எமக்கு ஏற்கனவே தெரிந்ததும் அடிக்கடி ஆய்வு செய்யப்பட்டதுமான சீனாவின் எழுச்சியுடன் இந்தியாவும் ஒரு பெரும் வல்லரசாக எழுச்சி பெற்றுள்ளமை உலக ஒழுங்கில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது. இந்து சமுத்திரத்தில் சவாலை எதிர்கொள்வது ஏகவல்லரசான அமெரிக்காவின் பேராதிக்கம் மட்டுமல்ல, அதற்கும் மேலாக கடந்த சில சகாப்தங்களாக சர்வதேச அரசியல் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்திவந்த அமெரிக்க, ஐரோப்பிய யப்பான் என்பவற்றின் கேந்திர முக்கூட்டும் கேள்வியாகியுள்ளது. அடுத்த தசாப்தத்தில் உலக ஒழுங்கில் தென் ஆசியப் பிராந்தியம் மிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் ஒன்றாக அமையும் என நாம் எதிர்பார்க்கலாம்"[20]

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சமவலுச் சக்திகளின் நிலை பச்சையாகக் கூறக்கூடியதொன்றல்ல. இதன் கட்டமைப்பு பலபக்கங்களைக் கொண்டவை. அதன் தொடர்புகள் நுட்பமானவை. அத்தோடு அளவிடப்படுபவை. பல ஆண்டுகளுக்கு முன்னர் பன்னாட்டுத்தேசிய கூட்டுத்தாபனங்கள் சம்பந்தமான கற்கையில் உருவாக்கப்பட்ட ஒரு சொல் உண்டு. கூட்டு மனு என்பதே அந்தச் சொல். இதன் அர்த்தம் சில துறைகளில் போட்டியிடுவதும் அதே சமயம் மற்றைய துறைகளில் ஒத்துழைப்பதுமாகும். சில துறைகளில் ஒத்துழைத்தும் வேறு துறைகளில் போட்டியிடுவதும் கூட்டு மனுவாகும். வகைமாதிரியாக இந்தியாவும் அமெரிக்காவும் சில துறைகளில் கேந்திர பங்காளிகளாக உள்ளனர். ஆனால்

புதுடெல்கி சீனாவினதோ, அமெரிக்காவினதோ சாதரணமான பங்காளியல்ல. அது தனது உடுக்கடிப்போனது தாளத்திற்கு ஏற்ப நடைபோட முயல்கின்றது.[21]

எந்தத் துறைகளில் அமெரிக்கா, புதுடெல்கி, மற்றும் சீனா ஒருவருடன் ஒருவர் போட்டி போடுகின்றனர் என்பதும் எந்தத் துறைகளில் அவர்கள் ஒத்துழைக்கின்றனர் என்பதுமே கேள்வியாகும். ஏக வல்லரசு உலக ஒழுங்கில் அமெரிக்கா தனது முதன்மையை நிலைநாட்டும் பொருட்டு ஆசியாவில் சம வலுச் சக்திகளை வரவேற்கலாம். (கொண்டலிசா றைசின் வார்த்தையில் கூறுவதானால் பல வல்லரசுகளின் காட்சித்தோற்றம் கொண்ட ஏக வல்லரசின் உலகம்[22]) ஆயின் இவ்வாறான அணுகு முறையால் சீனாவும் இந்தியாவும் திருப்திப் படுவார்களா அல்லது இவர்களுக்கான சவாலாக இது அமையுமா? சிறீலங்கா போட்டிக்கான அல்லது ஒத்துழைப்புக்கான ஒரு பகுதியா? அதிலும் முக்கியமாக அது ஒத்துழைப்புக்கான ஒரு பகுதியாயின் அந்த ஒத்துழைப்பின் விஸ்தாரம் எந்தளவானது?.

இந்த இடத்தில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சிறீலங்காவின் கேந்திர முக்கியத்துவத்தினைப் பற்றி ஆராய்வது பொருத்தமானதாகலாம்.

1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்தபோது இடம்பெற்ற நிகழ்வு ஒன்றை நினைவு கொள்கின்றேன். 1948 ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 4 ஆம் திகதி சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டது. இலங்கையின் முதலாவது சதந்திரப் பாராளுமன்றத்தின் சடங்கு சம்பிரதாயமான அங்குரார்ப்பணம் 1948 பெப்பிரவரி 10 இல் இடம்பெற்றது. ஒரு இளம் வாலிபனாக நான் இந்தச் சடங்கு சம்பிராதாய அங்குரார்ப்பணத்தில் கலந்துகொண்டிருந்தேன். இரு நினைவுகள் கடந்த பல ஆண்டுகளாக என்னை விட்டகலவில்லை. அதில் ஒன்று மாட்சிமைதங்கிய மகாராணியாரின் அரசவை வழக்குரைஞரும், இலங்கையின் பிரதம மந்திரியுமான மதிப்பிற்குரிய டீ. எஸ். சேனநாயக்காவின் உருவம். பாராளுமன்றத்தின் திறப்பின் பொருட்டு பெரிய கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. கொழும்பில் வெய்யில் எறித்துக் கொண்டிருந்தது. உயரமான தொப்பியுடன் கூடிய ஆங்கில உயர்குடியினர் இவ்வாறான வைபவங்களில் அணியும் உடையுடன் டீ. எஸ். சேனநாயக்கா கம்பீரமாக அங்கு நின்றிருந்தார். மக்கோலிப் பிரபுவின் 1835 ஆம் ஆண்டின் கல்வி அறிக்கையில் கூறப்பட்ட ‘‘இரத்தத்தாலும் நிறத்தாலும் இந்தியனாகவும், விருப்புக்களால், மதிப்பீடுகளால், ஒழுக்கங்களால் அறிவாற்றலால் ஆங்கிலேயராகவும் உள்ள ஒரு வகுப்பிளரை’’ உருவாக்கும் திட்டம் சில வெற்றிகளை அடைந்திருந்ததை அங்கு காண முடிந்தது.

அடுத்த நினைவு, சிம்மாசன உரை நிகழ்த்திய மன்னனின் பிரதிநிதியின் உருவம். அன்றைய அரசனின் சகோதரனும், குளொசெஸ்ரர் கோமகனுமான இவர் கடல்படை அட்மிறலின் சீருடையை அணிந்திருந்தார். அந்தச் சமயத்தில் கடல்படைச் சீருடையின் முக்கியத்துவம் எனக்குப் புலப்படவில்லை.

ஆனால் விசயம் என்னவென்றால் திருகோணமலையில் உள்ள கடல் தளத்தை பிரித்தானியாவின் பாவனைக்கு விடுவதற்கான பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை 1947.·.48 இல் இலங்கை பிரித்தானியாவுடன் செய்து கொண்டதாகும்[23]. இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் 1948 இல் சுதந்திரம் வழங்குவதற்கான முன் நிபந்தனையாகும். ஐக்கிய இராச்சியத்தின் வெளிவிவகார அலுவலகத்திற்கும் அவுஸ்திரேலியாவிற்கும் இடையே பரிமாறப்பட்ட கடிதங்கள்[24] (1947 இலும் இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதற்கு முன்னரும்) இந்த பாதுகாப்பு உடன்படிக்கை மீது ஐக்கிய இராச்சியம் மட்டுமல்ல, அவுஸ்திரேலியாவும் (இந்து சமுத்திரத்தின் மீதான அவுஸ்திரேலியாவின் மேற்குக் கடலோரத்துடன்) காட்டிய முக்கியத்துவம் சுவாரசியமானது.[25]

இருந்தபோதும் சிறீலங்காவின் கேந்திர முக்கியத்துவம் திருகோணமலையால் மட்டும் எழுந்ததல்ல. அது அப்படிச் சாதாரணமான ஒன்றல்ல. இதனுடன் ஹம்பாந்தோட்டையை, அமெரிக்க ஒலிபரப்பு நிறுவனக் கட்டுமானங்கள் போன்றவற்றை நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

டீக்கின்ஸ் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ரமேஸ் சோமசுந்தரம் ‘‘சிறீலங்காவின் கேந்திர முக்கியத்துவம்’’ என்னும் தனது 2005 ஆண்டுப் பிரசுரத்தில் சிறீலங்காமீதான சர்வதேசச் சமூகத்தின் கரிசனைக்கான மூன்று காரணங்களைக் குறிப்பிடுகின்றார்.

(1) சிறிலங்காவின் கேந்திர அமைவிடம்
(2) இது ஒரு பெரும் தொடர்பு மையமாக அமைந்துள்ள நிலை.

(3) பிரித்தானிய அட்மிரல் ஹொறெசோ நெல்சனால் ''உலகில் மிகச்சிறந்த துறைமுகம்'' என வர்ணிக்கப்பட்ட திருகோணமலையை இது கொண்டுள்ளமை.

இந்து சமுத்திரத்தில் ஒரு கேந்திர முனையை சிறீலங்கா வரித்துக்கொண்டுள்ளது. இந்தப் பரந்த சமுத்திரம் 2,850,000 சதுர மைல்களை உட்கொண்டு, வடக்கே இந்திய தீபகற்பத்தின் கடலோரத்தையும், கிழக்கே மலேசியா, இந்தோனேசியா, அத்தோடு அவுஸ்திரேலியாவையும், தெற்கே அண்டாட்டிக்காவையும், மேற்கில் கிழக்கு ஆபிரிக்காவையும் தொட்டு நிற்கின்றது.[26]

1985 இல் திம்பு பேச்சுவார்த்தைக்கான தமிழ்ப் பேராணைக்குழுவின் அங்கத்தவராக நான் பூட்டான் நாட்டிற்குச் சென்றிருந்தேன்.[27] அங்கு இந்திய உளவுத்துறையான ''றோ'' இந்து சமுத்திரத்தில் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்களால் எதிர்நோக்கும் ஆபத்துக்கள், அவற்றால் தாம் அடைந்த நெருக்கடிகள், இதனால் சிறீலங்காவுடன் சில உடன்பாட்டிற்கு ஏன் வரவேண்டும் என்பனபற்றி எமக்குத் தெரியப்படுத்துவதில் கணிசமான நேரத்தைச் செலவிட்டனர்.

திம்பு பேச்சுவார்த்தைகள் தாமாகவே தோல்வி கண்டன. ஆயின் இரண்டு ஆண்டுகளின் பின்னர் 1987 இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தம் இந்தியாவிற்கு அதன் கேந்திர நலன்களைப் பெற்றுக்கொடுத்தது.
இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு[28] முன்னோடியாக 29 யூலை 1987 இல் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும், சிறீலங்காவின் அதிபர் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவிற்கும் இடையே பரிமாறப்பட்ட கடிதங்கள் ஏனையவற்றுடன், அன்னிய ஒலிபரப்பு நிறுவனங்களுடன் சிறீலங்கா அரசு ஏற்படுத்திக்கொண்டுள்ள ஒப்பந்தங்கள் மீளாய்வு செய்யப்பட்டு அவை பொது ஒலிபரப்பு அன்றி இராணுவம் மற்றும் உளவுச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படமாட்டாது என்பது உறுதி செய்யப்படும் என்பதையும், திருகோணமலை மற்றும் சிறீலங்காவின் இதர துறைமுகங்கள் இந்தியாவின் நலன்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் நோக்குடன் எந்தவொரு நாட்டின் இராணுவ வசதிக்காகவும் அளிக்கப்படமாட்டாது என்பதையும் குறிப்பிடுகின்றது.

இந்தத் தீவில் இடம்ஈறும் முரண்பாடு மீதான அமெரிக்காவினதும் இந்தியாவினதும் தலையீட்டிற்குப் பின்னால் நீண்ட வரலாறு ஒன்று உண்டு.

1979 இல் அமெரிக்காவின் மசச்சூசெற்ஸ் மாநிலத்தின் அதிபர் 22 மே 1979ஐ ஈழத் திருநாளாகப் பிரகடனம் செய்திருந்தார்[29]. 1981 இல் மசச்சூசெற்ஸ் மாநிலத்தின் சட்டசபையில் தனியான இறைமை கொண்ட தமிழீழ அரசினை மீட்டு எடுப்பதையும் மீட்டு உருவாக்குவதையும் வேண்டிநிற்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது[30]. மசச்சூசெற்ஸ் மாநிலத்தில் உள்ள சமர்வில் நகரபிதாவால் 22 யூன் 1981 இல் செய்யப்பட்ட பிரகடனம் ஏனையவற்றுடன்,

''திருகோணமலையில் உள்ள துறைமுகம் இயற்கையின் அற்புதங்களில் ஒன்றாகும். அத்தோடு இந்து சமுத்திரத்தில் அதன் கேந்திர அமைவுமாகும். சிங்கள நாட்டுடன் நிர்வாகத்தின் பொருட்டு கூட்டிணைக்கப்படும் வரை யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, மற்றும் அம்பாறையுடன் திருகோணமலை தூய தமிழ்ப் பிரதேசமாக இருந்துவந்தது. அத்தோடு இத்தீவில் தமிழ் மக்கள் மிகத் தொன்மையான காலத்தில் இருந்து வசித்து வருகின்றனர்.''[31] எனக் குறிப்பிடுகின்றது.

அதே சமயத்தில் தமிழ் ஈழத்திற்கான தமது போராட்டத்தில் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு இந்தியா ஆயுதங்களையும் பயிற்சிகளையும் வழங்கியது.[32] 1985∴89 இல் சிறீலங்காவிற்கான இந்தியத் தூதுவராகவும், 1991∴94 காலப்பகுதியல் வெளியுறவுக்கான செயலாளராகவும், 2004∴2005 இல் இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும் விளங்கிய ஜோதீந்திர நாத் டிக்ஸிற் 1998 இல்

''அமெரிக்கா, இஸ்ரேல், மற்றும் பாகிஸ்தானுடனான சிறீலங்காவின் உறுதியானதும் பரந்ததுமான இராணுவ மற்றும் உளவுத்துறைகளின் தொடர்புகளின் விழைவாகவே தமிழ்த் தீவிரவாதம் இந்தியாவின் ஆதரவினைப் பெற்றது. இந் நாடுகளின் வரவு இந்தியாவின் கேந்திர நலன்களுக்கு அச்சுறுத்தலாகவும், இந்தியாவின் தென் மாநிலங்களில் அது பிரிவினைவாத இயக்கங்களுக்கு ஊக்கத்தினை அளிக்கும் என்றும் அந்தச் செயல்பாடுகள் பாகிஸ்தான் அமெரிக்கா போன்றவற்றிடம் இருந்து ஊக்கத்தினைப் பெறும் என்றும்

கருதப்பட்டது. க்'மீர், பஞ்சாப் தொடர்பான இவர்களது கொள்கைகளால் இந்தியா பெற்ற அனுபவங்களும் கருத்தில் கொள்ளப்பட்டன. நாடுகளுக்கிடையேயான உறவுகள் அறத்தின் வழிநின்று பேணப்படுவதில்லை. அன்றும் இன்றும் அவை அறம்சாராத காட்சிக்கோலமாகவே உள்ளது...''[33]

இவற்றினைக் குறிப்பிடும்போது இவை பனிப் போர்க் காலத்தில் ஏற்கக்கூடியவை ஆனால் இன்று உலகம் அதில் இருந்து நகர்ந்து விட்டது எனச் சில வேளைகளில் கூறப்படுகின்றது. உலகம் நகர்ந்துவிட்டது என்பது உண்மைதான். ஆனால் இன்று நாம் புதிய பனிப்போரின் மத்தியில் உள்ளோம். ஐக்கிய அமெரிக்கா உலகின் தனி வல்லரசாக இருக்கலாம், ஆனால் அது சமச்சீரற்ற பல பக்க உலகில் உள்ளது. இந்த உலகில் பலமான பிராந்திய வல்லரசுகளின் (ஐரோப்பிய ஒன்றியம், ரூசியா, சீனா, இந்தியா உட்பட) உலகளாவிய தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது. ''சமச்சீரின்மை'' படிப்படியாகக் குறைந்து செல்லும் உலகம் ஒன்றில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இது புதிய பனிப்போர்.[34] பகிரங்கமான போர்கள் எவரின் நலன்களுக்கும் உகந்ததல்ல என்பதால் இது ஒரு பனிப்போர்.

இன்று சிறீலங்காவிற்கு சீனா ஒரு ''நலம் செய்யும் நண்பன்''[35]. 13 மார்ச் 2007 ஆசிய ரைம்ஸ் பத்திரிகையில் சுதா இராமசந்திரன்,

''இந்தியாவின் தெற்கு வாசலில் நங்கூரம் இட சீனா தயாராகிவிட்டது. சிறீலங்காவிற்கும் சீனாவிற்கும் இடையே கைச்சாத்தான உடன்படிக்கையின் பிரகாரம் சீனா தீவின் தெற்குக் கடலோரத்தில் உள்ள ஹம்பாந்தோட்டையில் ஒரு துறைமுக அபிவிருத்தியில் பங்குகொள்ள உள்ளது. சீனாவிற்கு ஹம்பாந்தோட்டையின் முக்கியத்துவம் அது இந்தியாவின் தெற்கு கடலோரத்தை அண்டி இருப்பதாகும். இந்து சமுத்திரத்தின் இடைநடுவில் இது சீனாவின் இருப்பிற்கு இது வழிகோலியுள்ளது''[36] என எச்சரித்துள்ளார்.

ஐக்கிய அமெரிக்காவிற்கும் சிறீலங்காவிற்கும் இடையே 5 மார்ச் 2007 இல் கைச்சாத்தான பத்து வருடங்களுக்கான கொள்வனவு மற்றும் பாதுகாப்புச் சம்பந்தமான உடன்படிக்கைபற்றி முரளீதர் றெட்டி, மார்ச் 2007 இல் கருத்துத் தெரிவிக்கையில்,

> ''ஐக்கிய அமெரிக்காவிற்கும் சிறலங்காவிற்கும் இடையே மார்ச் 5, 2007 இல் கைச்சாத்தான (இராணுவ) கொள்வனவு மற்றும் சேவைகள் சம்பந்தமான பத்து வருட உடன்படிக்கையானது மற்றக்காரியங்களுடன் பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட தேவைகளையும் எரிபொருள் வசதிகள் என்பவற்றையும் அளிக்கின்றது. இவற்றால் இப் பிராந்தியத்தில் குறிப்பாக இந்தியாவிற்கு பெரும் விழைவுகள் ஏற்படும். அமெரிக்காவின் சுத்துமாத்து, மற்றும் குதற்க வாதங்களை ஒதுக்கினால், இந்த உடன்படிக்கையானது ஒரு இராணுவ ஒப்பந்தமாகும். அது வெளிப்பார்வையில் அமெரிக்காவிற்குச் சாதகமாகச் செய்யப்பட்டுள்ளது.''[37]

இவை சிறீலங்கா என்னும் தீவில் இடம்பெறும் முரண்பாடு சம்பந்தமான சர்வதேசப் பருமானங்களின் பண்புகளில் சில. இந்தத் தீவில் இரண்டு முரண்பாடுகள் உள என்று கூறுவதில் பிழையில்லை. சிறீலங்கா மக்களின் தேசியம் என்ற போர்வையுள் மறைந்துநிற்கும் சிங்களஇனத்தேசியத்தின் அடக்குமுறையில் இருந்து தம்மை விடுவிக்க போராடும் தமிழீழ மக்களின் போராட்டத்தால் எழுந்துள்ள முரண்பாடு ஒன்று. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஆதிக்கமும் செல்வாக்கும் செலுத்துவதற்காக முட்டிமோதும் சர்வதேச சக்திகளிடையே இடம்பெறும் முரண்பாடு மற்றதாகும்.

இதன்பிரகாரம் இந்த முரண்பாட்டிற்கான தீர்மானத்தை தமது சொந்த (முரண்படும்) நலன்களை முன்னெடுப்பதற்காக அல்லது ஆகக்குறைந்தது அந்த நலன்களை நலிவுறாது பாதுகாப்பதற்காக பயன்படுத்துவதில் இந்த சர்வதேசசக்திகள் கரிசனை காட்டுகின்றன என்பதை ஆதாரங்கள் காட்டிநிற்கின்றன. அதேசமயம் இவர்கள் எல்லோரும் தமக்கிருக்கும் கேந்திர நலன்களை மறுக்கும் பகிரங்க இராசதந்திரத்தில் தம்மை பெரும்பாலும் ஈடுபடுத்திக் கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக சிறீலங்காவிற்கான முன்னைநாள் அமெரிக்கத் தூதுவரான ஜெ.்.ப்ரீ லன்ஸ்ரட் என்பார் 2002.்.2006 காலத்தில் சிறீலங்காவின் சமாதான முன்னெடுப்புக்களில் அமெரிக்காவின் பங்கு என்னும் தனது அண்மைய கட்டுரையில்,

> ''பனிப்போரின் முடிவுடன் சிறீலங்காவின்மீது இருந்த அமெரிக்காவின் கரிசனை தேய்ந்துவிட்டது. மிக அண்மித்த 2000 ஆண்டில் கூட சர்வதேச அபிவிருத்திக்கான

அமெரிக்க முகவர் தாபனம் அபிவிருத்திக்கான உதவிகளை கணிசமாகக் குறைப்பதுபற்றி உத்தேசித்திருந்தது. 2001 ஆண்டில் ஆரம்பமான மேம்படுத்தப்பட்ட ஈடுபாடானது சிறீலங்காவில் அமெரிக்காவிற்கு உள்கள கேந்திர நலன்கள் கணிசமாக இல்லாதபோதிலும் இடம்பெற்றுள்ளது. சிறீலங்காவில் அமெரிக்காவிற்கு அரசியல் இராணுவ நலன்கள் பெரிதாக இல்லை. அத்தோடு சிறீலங்காவின்க இராணுவத் தளங்கள்மீது அமெரிக்காவிற்கு அக்கறை இல்லை. பொருளாதார வர்த்தக நிலைப்பாட்டில் சிறீலங்கா அமெரிக்காவின் பெரிய வர்த்தகப் பங்காளியாக இருக்கும் சாத்தியம் அண்மையில் இல்லை. அமெரிக்க உள்நாட்டு அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் அளவிலான சிறீலங்காவின் சமூகத்தினர் அமெரிக்காவில் இல்லை''[38]

எனக் கூறுகின்றார்.

பழைய பனிப்போரின் முடிவுடன் புதிய பனிப்போர் ஒன்று ஆரம்பமாகிவிட்டதை தூதுவர் ஜெ.ஃப்றீ லன்ஸ்ரட் குறிப்பிடத் தவறிவிட்டார். ஆசியக் கடலோரங்களில் எழுச்சி பெற்றுவரும் சீனாவால் ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொள்வதுபற்றி ''முத்துக்ககளின் கோர்வை'' என்று அமெரிக்க லெ.ஃப்ரினன் கொலனல் கிறிஸ்தோபர் ஜே. பெற்சனால் எழுப்கபப்பட்ட விடயங்கள் பற்றி இவர் பேசத் தவறிவிட்டார். கேந்திர நலன்கள் இல்லை என இவர்கள் மறுக்கலாம் இருந்தபோதும் அவற்றை எல்லா நேரமும் மறைக்க முடியாது.

''அமெரிக்க இராணுவத்தினரை ஆபத்திற்குள்ளாக்காது கடல் சண்டை சம்பந்தமான அண்மைக்கால கோட்பாடுகளை பரீட்சிக்கும் பொருட்டும்,, இப் பிராந்தியத்தில் வளர்ந்து வரும் சீனாவின் இருப்பினை தாக்குப்பிடிப்பதன் பொருட்டும் நிலத்திலும் நீரிலும் அத்தோடு கிளர்ச்சிகளுக்கு எதிரான இராணுவ முறைகளை பரீட்சிக்கும் பொருட்டும் ஆயிரத்திற்கும் அதிகமான படையினரை இறக்கி அமெரிக்க கடல்படையினர் சிறீல்காவின் கடல் படையினருடன் இணைந்து இம்மாதத்தின் பிற்பகுதியில் பயிற்சிகளை நடத்துவர்.'' இந்தியக் கடற்படையினரின் சிறீலங்காவின் கடல்படைக்கான பயிற்சி - ராகுல் பேடி, அக்ரோபர் 25, 2006[39] (45)

''இந்து சமுத்திரத்தில் சீனாவின் கடல்படையின் வளர்ச்சிபற்றி புதுடெல்கியில் இந்திய அமெரிக்க பாதுகாப்பு கூட்டு நடவடிக்கை குழுவினரின் கடைசிக் கூட்டத்தில் (ஏப்பிரல் 10, 2007) அக்கறையுடன் நோக்கப்பட்டது. அத்தோடு மயன்மார், வங்காளதேசம், சிறீலங்கா, மாலைதீவுகள், சேய்செலஸ், மொறீசியஸ், மடகாஸ்கர் போன்ற நாடுகளுடனான சீனாவின் இராணுவ கடல்வழித் தொடர்புகளின் தீடீர் வளர்ச்சியும் இக் கூட்டத்தில் கருத்தில் கொள்ளப்பட்டது. இப் பிராந்தியத்தில் 200 ஆண்டுகளாக நிலவிய ஆங்கிலமொழி இனத்தவரின் இருப்பானது இப்போ தமது நலங்களை முன்னெடுப்பதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் அமெரிக்காவினதும் சீனாவினதும் வரவின்மூலம் புறம்தள்ளப்பட்டுள்ளது. இந்து சமுத்திரத்தின் உடமையாளர்கள் தமது நலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஒன்றுகூடும் காலம் இதுவல்லவோ.''
அற்றுல் டேவ் - மொறீசியஸ் ரைம்ஸ், மே 25, 2007[40]

தமது நலன்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்துவதில் சர்வதேச சமூகத்தினர் காட்டும் தயக்கம் புரிந்துகொள்ளத்தக்க ஒன்றாக இருக்கலாம். அரசுகள் மற்றைய அரசுகளின் அலுவல்களில் தலையிடுவதற்காக மனித உரிமைகளையும் மனிதாபிமாமானச் சட்டங்களையும் கருவிகளாக அடிக்கடி பயன்படுத்துவதையும் நாங்களும் அடையாளம் கண்டுகொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாக பனிப்போர்க் காலத்தில் முக்கிய பங்கினை ஆற்றிய ஹெல்சிங்கி கவனிப்பை நாம் கொண்டிருந்தோம். இப்போது ஹெல்சிங்கி கவனிப்பு மனித உரிமைகள் கவனிப்பாக முதிர்ச்சிபெற்றுள்ளது.

இவற்றைச் சொன்னபோதிலும் சிறிலங்காமீதான தமது சொந்த கேந்திர நலன்களை (முரண்பட்ட) சர்வதேசச் சக்திகள் மறுப்பதானது அங்குள்ள உண்மையான பிரச்சனைகளை திரையிட்டு மறைப்பதாகும். இது அர்த்தமுள்ள முரண்பாட்டுத் தீர்வுக்கான முன்னெடுப்புக்களை கைக்கொள்ள வழிசமைக்காது. தீக்கோழியைப்போல் நாங்கள் எல்லோரும் மொத்தமாகத் தலைகளை மணலில் புதைக்கமுடியாது.

இந்தக் கருத்தரங்கின் நோக்கம் இலங்கைத்தீவில் இடம்பெறும் முரண்பாட்டில் சர்வதேசச் சக்திகளின் கேந்திர நலன்கள் பற்றிய எமது புரிந்துணர்வை வளர்த்துக்கொள்வதே என நான் நம்ப விரும்புகின்றேன். எந்தளவிற்கு இவர்களது கேந்திர நலன்களை நாம் மறைவிடத்தில் இருந்து வெளிக்கொணருகின்றோமோ அந்தளவிற்கு தீவில் உள்ள முரண்பாட்டிற்கான

தீர்மானத்தை ஆக்கபூர்வமான வகையில் எம்மால் முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கலாம்.

இது தமிழ்மக்களும் சிங்களமக்களும் அவர்களை எதிர்நோக்கும் உண்மையான அரசியலின் கனிவற்ற யதார்த்தினை விளங்கிக்கொள்ளவும் வழிவகுக்கும். பேச்சின் ஆரம்பத்தில் சில சொற்களைச் சிங்களத்திலும் தமிழிலும் கூறி ஆரம்பித்ததற்கான காரணத்திற்கு இது என்னை இட்டுச் செல்கின்றது. முடிவில் சிலருக்கு இது எந்கதளவிற்கு கடினமாகத் தெரிந்தாலும். எப்படி சுதந்திரமான, கட்டற்ற இரண்டு மக்கள் ஒருவருடன் ஒருவர் எவ்வாறு இணைந்துகொள்ளலாம் என்று தமிழ் மக்களும் சிங்களமக்களும் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொள்ளவேண்டும்.

தமிழீழத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் 1993 இல் கூறிய

> “இந்த உலகமானது மானிட தர்மத்தின் சக்கரத்தில் சுழலவில்லை. ஒவ்வொரு நாடும் தனது தேசிய சுயநலத்தையே முதன்மைப்படுத்துகின்றது. மனித உரிமை, மக்கள் உரிமை, என்ற தார்மீக அறத்திலும் பார்க்க பொருளாதார, வர்த்தக நலன்களே இன்றைய உலக ஒழுங்கை நிர்ணயிக்கின்றன. ஆகையால் எமது போராட்டத்தின் தார்மீக அறத்தினை சர்வதேச சமூகம் உடனடியாக அங்கீகரிக்கும் என் நாம் எதிர்பார்க்க முடியாது”

வார்த்தைகளுடன் நான் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

நன்றி.

ம. தனபாலசிங்கம்,
சிட்னி அவுஸ்திரேலியா.

---

1 Minute on Indian Education, 2 February 1835
www.columbia.edu/itc/mealac/pritchett/00generallinks/macaulay/txt_minute_education_1835.html

2 See generally on Civic Nationalism & Ethno Nationalism at
www.tamilnation.org/selfdetermination/nation/civic_ethno/index.htm

3 "...In the Sinhala language, the words for nation, race and people are practically synonymous, and a multiethnic or multi communal nation or state is incomprehensible to the popular mind. The emphasis on Sri Lanka as the land of the Sinhala Buddhists carried an emotional popular appeal, compared with which the concept of a multiethnic polity was a meaningless abstraction..." (Sinhala Historian K. M. de Silva in Religion, Nationalism and the State, USF Monographs in Religion and Public Policy, No.1 (Tampa, FLA: University of South Florida 1986) at p31 quoted by David Little in Religion and Self Determination in Self Determination - International Perspectives, MacMillan Press, 1996 quoted at www.tamilnation.org/tamileelam/fundamentalism/index.htm)

“The central place of Buddhism in the constitution of the Singhalese territorial relation of a nation goes back to the Sinhalese histories of the fourth and fifth centuries of the Christian era, the Dipavamsa and the Mahavamsa. There one finds the myth of the visit of the Buddha to Sri Lanka, during which he freed the Island of its original supernatural and evil inhabitants, the Yakkas. As a result the Buddha had sanctified the entire island transforming it into a Buddhist territory. These histories thus asserted a territorial relation between Sinhalese and Buddhism, the stability of which was derived from a perceived order of the universe, that is, the actions of the Buddha. The reaffirmation of that relation may be observed to-day in the shrines throughout the island at Mahiyangana, where the supposed collarbone of the Buddha is kept, at Mount Samantakuta, where the Buddha’s supposed fossilized footprint may be seen and the most important one at Kandy, supposedly containing the relic of the Buddha’s tooth." Stephen Grossly, Professor of Philosophy and Religion, Clemson University on The primordial, kinship and nationality”. “When is the Nation?” Edited by Atsuko Ichijo and Gordana Uzelac Routledge (2005) p 68 quoted at www.tamilnation.org/tamileelam/fundamentalism/index.htm)

4 See The Indian Ocean Region - a Story told in Pictures

5 "..Myanmar's military government leased the Coco Islands to the Chinese in 1994. China has a maritime reconnaissance and electronic intelligence station on the Great Coco Island and is building a base on Small Coco Island. The significance of these facilities for China stems from the fact that the Coco Islands are located at a crucial point in traffic routes between the Bay of Bengal and the Malacca Strait and lie very close to India. Sudha Ramachandran in Myanmar plays off India and China, 17 August 2005 www.tamilnation.org/intframe/indian_ocean/index.htm#Myanmar,_Coco_Islands_-_China

6 Andaman Islands & the Straits of Malacca - a Choke Point of the Indian Ocean at
www.tamilnation.org/intframe/indian_ocean/index.htm#The_Straits_of_Malacca_-_a_Choke_Point

[7] Chinese Submarine Base in the Maldives at www.tamilnation.org/intframe/indian_ocean/index.htm#Marao,_Maldives_-_China

[8] Indian Monitoring Station in Madagascar www.tamilnation.org/intframe/indian_ocean/index.htm#Madagascar

[9] Gwadar in Pakistan: China's Naval Outpost on the Indian Ocean at www.asianresearch.org/articles/2528.html

[10] "Indian Defense Minister Pranab Mukherjee said on May 31 that the naval base INS Kadamba in Karwar, Karnataka state will protect the country's Arabian Sea maritime routes. Kadamba will become India's third operational naval base, after Mumbai and Visakhapatnam." India's Project Seabird and Indian Ocean's Balance of Power, PINR, 20 July 2005 at www.tamilnation.org/intframe/indian_ocean/050720seabird.htm

[11] US Navy is upgrading its submarine base at the isolated tropical atoll Diego Garcia www.theregister.co.uk/2007/04/07/marineville_in_diego_garcia/

[12] US Rear Admiral Alfred Thayer Mahan quoted by Cdr. P K Ghosh in Maritime Security Challenges in South Asia and the Indian Ocean, 18 January 2004 http://community.middlebury.edu/~scs/docs/ghosh,%20maritime%20security%20challenges%20in%20SAsia%20&%20Indian%20Ocean.pdf

[13] " ...Next to nothing has been written about the U-boat war in the Indian Ocean… The battle began in August 1943, when a German submarine arrived in the Malaysian harbour of Georgetown. In total, nearly forty U-boats were assigned to penetrate the Indian Ocean, serving alongside troops of the occupying Imperial Japanese forces..." Lawrence Paterson - Hitler's Grey Wolves: U-Boats in the Indian Ocean www.tamilnation.org/books/War/index.htm#Lawrence_Paterson

[14] World Fact Book, C.I.A www.cia.gov/library/publications/the-world-factbook/print/xo.html

[15] The International Frame of the Tamil Eelam - The Oil Dimension at www.tamilnation.org/intframe/tamileelam/070920oil.htm

[16] "China is the world's number two oil consumer after the U.S. and has accounted for 40 percent of the world's crude oil demand growth since 2000. .. in the presence of sporadic power shortages, growing car ownership and air travel across China and the importance of energy to strategically important and growing industries such as agriculture, construction, and steel and cement manufacturing, pressure is going to mount on China to access energy resources on the world stage." Setting the Stage for a New Cold War: China's Quest for Energy Security - PINR, 25 February 2005 www.pinr.com/report.php?ac=view_report&report_id=272

[17] " The geopolitical strategy dubbed the "String of Pearls" is arising as foreign oil becomes a center of gravity critical to China's energy needs. China's rising maritime power is encountering American maritime power along the sea lines of communication (SLOCs) that connect China to vital energy resources in the Middle East and Africa. The "String of Pearls" describes the manifestation of China's rising geopolitical influence through efforts to increase access to ports and airfields, develop special diplomatic relationships, and modernize military forces that extend from the South China Sea through the Strait of Malacca, across the Indian Ocean, and on to the Arabian Gulf… " String of Pearls: Meeting the Challenge of China's Rising Power Across the Asian Littoral Lt.Col. Christopher J. Pehrson, July 2006

[18] Barry Desker, Director IDSS, Singapore in Maritime Balance of Power in the Asia-Pacific - Institute of Defence and Strategic Studies, Singapore, 8th – 9th March 2005 www.tamilnation.org/intframe/indian_ocean/maritime_balance_of_power.pdf

see also "… Let this be clear: the two major powers of the region, China and India, are scrambling for advantage around the Indian Ocean's rim. China is building military and naval links with Bangladesh and Myanmar. The cooperation between China and African countries is now getting more and more visible, particularly after the China-Africa summit in Beijing in November 2006... Reports available indicate that both India and the United States are studying intensely this rise in Chinese activity. Atul Dev on The Indian Ocean: Current Security Environment, 25 May 2007 www.tamilnation.org/intframe/indian_ocean/070525atul_dev.htm

[19] Donald L. Berlin, Head of Security Studies, Asia Pacific Centre for Security Studies, Honolulu, Hawaii - www.thehindu.com/2006/12/13/stories/2006121305190300.htm

[20] Adam Wolfe, Yevgeny Bendersky, Dr. Federico Bordonaro - India's Project Seabird and Indian Ocean's Balance of Power, PINR, 20 July 2005 www.pinr.com/report.php?ac=view_report&report_id=330&language_id=1

[21] "Evolving Entente": Geostrategic Import of the Coming Bay of Bengal Naval Exercise, Ramtanu Maitra, 27 July 2007 www.tamilnation.org/intframe/indian_ocean/070727naval_exercises.htm

[22] "..Rice's announcements culminate a major revision of Washington's overall geostrategy that has been in the making since 2004 when the failures of the Iraq intervention exposed the limitations of U.S. military capabilities and threw into question the unilateralist doctrine outlined in the administration's 2002 National Security Strategy... Rice's reforms are significant because they are embraced by a multipolar perspective on world politics that brings Washington into line with the other major power centers. Her reforms put into place concrete measures that follow from that perspective, even though they are -- as should be expected -- just a beginning.... other power centers will welcome Washington's acknowledgment of multipolarity at the same time that they will be challenged by it..." Condoleezza Rice Completes

Washington's Geostrategic Shift, 1 February 2006 at
www.pinr.com/report.php?ac=view_report&report_id=431&language_id=1

[23] Defence Agreement between His Majesty's Government in the United Kingdom and the Government of Ceylon, 4 February 1948

[24] Exchange of Letters between UK and Australia concerning Defence Agreement between UK and Ceylon, 1947

[25] See generally Stirling Naval Base in Australia at
www.tamilnation.org/intframe/indian_ocean/index.htm#Stirling,_Cockburn_Sound

[26] 'Strategic Significance of Sri Lanka' - Ramesh Somasundaram of Deakin University quoted by P.K. Balachandran in Hindustan Times, 30 May 2005 at
www.tamilnation.org/intframe/indian_ocean/050530sri_lanka_strategic_importance.htm

[27] See generally Thimpu Talks - July/August 1985
www.tamilnation.org/conflictresolution/tamileelam/85thimpu/thimpu00.htm

[28] Exchange of Letters between Indian Prime Minister Rajiv Gandhi and Sri Lanka President J.R.Jayawardene, 29 July 1987 preceding Signing of Agreement

[29] Proclamation of Eelam Day by Governor of the State of Massachusetts, 22 May 1979

[30] Resolution of US Massachusetts House of Representatives Calling for the Restoration of the Separate Sovereign State of Tamil Eelam, 18 June 1981

[31] Proclamation by Mayor of Somerville, Sister City of Trincomalee, Eelam (Naval Base), 22 June 1981

[32] "...Most Tamil separatists from Sri Lanka had accepted the Indian offer (to provide arms and training) at its face value, thinking that New Delhi was reaching out to them out of genuine concern for their condition. However, an extraordinary revelation began to unfold as the training started. Many guerrillas realized that the training was just a subterfuge for a larger strategic game that India was attempting to play, a game in which the Tamil rebels may end up being just expendable pawns…" Narayan Swamy, M.R. - Inside an Elusive Mind - Prabhakaran Published by Literate World, Inc, USA, 2003 at www.tamilnation.org/books/Eelam/elusivemind.htm

[33] Jyotindra Nath Dixit on Indira Gandhi and India's Motivations in 1983

[34] 'Setting the Stage for a New Cold War: China's Quest for Energy Security, PINR Re port 25 February 2005
www.pinr.com/report.php?ac=view_report&report_id=272 see also US Strategic Interests in Sri Lanka, Dharmaretnam Sivaram, 30 July 2005

[35] 'China, a benign and sincere friend of Sri Lanka' Text of speech delivered by (SLFP led Peoples Alliance) Sri Lanka Foreign Minister Lakshman Kadirgamar 9 April 2005

[36] See generally China – Hambantota Project at
www.tamilnation.org/intframe/indian_ocean/index.htm#Hambantota,_Sri_Lanka_-_China

[37] Another U.S. base in the Indian Ocean? B. Muralidhar Reddy in the Hindu, 9 March 2007 quoted at
www.tamilnation.org/intframe/indian_ocean/070309us_srilanka_india.htm

[38] United States Role in Sri Lanka Peace Process 2002-2006, Jeffrey Lunstead, 15 May 2007 at
www.tamilnation.org/intframe/us/070515Lunstead_US_Role_in_SL_War.pdf

[39] US marines to train Sri Lankan navy, Rahul Bedi, 25 October 2006 at
www.tamilnation.org/intframe/tamileelam/061025rahul_bedi.htm

[40] The Indian Ocean – Current Security Environment , Atul Dev – Mauritius Times, 25 May 2007 at
www.mauritiustimes.com/250507atul.htm